# மாபெரும் பெண்ணுரிமை ஜீவ நதி, மகாகவி பாரதி : ஒரு பார்வை

## The Perennial River of Women Rights Mahakavi Barathi

Mrs.K.Priyadarshini,
Research Associate,
Women's studies centre
Madurai Kamaraj University

“அவனொரு புரட்சிக் கவிஞன்.மண்ணில் பதிந்த கால்கள் வானை உரசும் உயரம். உலகை அளாவிய பார்வை. காலங்காலமாக இந்த தேசம் சேகரித்த இலக்கிய சம்பத்துகளை எல்லாம் வாரி எடுத்துக்கொண்டு வளம்பெறச்செய்த வள்ளல். கவிதைகளில் அவன் நமக்கு விட்டுச்சென்ற பணியின் பளு நம்மை மலைக்க வைக்கிறது. புதிய சமுதாயத்தையும், புதிய வாழ்க்கை முறையையும், புதிய மனிதனையும், அவனது கவிதைகள் நமக்கு காட்டுகின்றன.”[1]

**ஆய்வுச்சுருக்கம்**

மகாகவி பாரதி தன் எழுச்சிமிகு பாட்டினால் மக்களின் மனதில் விடுதலை உணர்வை ஊட்டினார். ஆதனால் அன்றைய ஆங்கிலேய ஆட்சியர்களிடமிருந்து பல இன்னல்களை சந்தித்தார். பெண்கள் அடிமைப்பட்டு படிப்பறிவு இல்லாமல் துன்பப்படுகிறார்கள் என்பதை சக மேலை நாட்டுப் பெண்களை ஒப்பிட்டு, பெண் விடுதலையின் அவசியத்தை தன் பாடல் வரிகளில் மூலமாகவும் கட்டுரை மூலமாகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உணர்த்தினான். அக்காலத்தில் உள்ள சமுதாய மூடநம்பிக்கைகள், விதவை திருமணம் கூடாது. குழந்தை திருமணம் ஆகியவற்றை மகாகவி பாரதி எதிர்த்தார். அக்காலகட்டத்தில் பெண்களுக்கு சம உரிமை வேண்டும் என்று போராடினார் கவிஞர் பாரதி. தான் சந்தித்த மேலை நாட்டு பெண்களிடம் இதை மகாகவி பாரதி கற்றுக்கொண்டார். பெண்களுக்கு சம உரிமை இல்லை என்றால் இச்சமுதாயம் முன்னேற்றம் அடையாது என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். இக்கட்டுரையானது மகாகவி பாரதியின் மதம் கல்வியின் சிந்தனைகள் அக்காலக்கட்டத்தில் கவிஞர் பாரதியை ஈர்த்த இயக்கங்கள், பெண்கள் சிந்தனையாளர்கள், தன் கட்டுரைகளில் பெண்களுக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்தல் மற்றும் மகாகவி பராதி பெண்ணுரிமையை மீட்டெடுக்கும் சக்தியாக இன்றைய காலசுழலிலும் அவர் உள்ளார். என்பதை இக்கட்டுரை தெளிவாக விளக்குகிறது.

**முக்கிய வார்த்தைகள்**

மகாகவி பாரதி, பெண் விடுதலை, பெண்களுக்கு சம உரிமை, சமுதாயம்.

**முன்னுரை**

‘கவிஞன் பிறக்கின்றான்; உருவாக்கப்படுவதில்லை’. ஒரு நூற்றாண்டு கடந்த வீறு கவி, மகாகவி. சமுதாய சீரமைப்பிலும் விடுதலை எழுச்சியிலும் மகாகவியின் பங்களிப்பு அளப்பரியது. விடுதலை எழுச்சிக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் இயைந்த இனிய, எளிய பாடல்களை படைத்தார். கண்மூடித்தனமான சமயச் சடங்குகளிலும் சம்பிரதாயங்களிலும் காலத்தையும் பணத்தையும் வீணாக்கிய பாமர மக்களிடையே ஒருவித புத்தறிவை புகுத்தியவர் பாரதி. மக்களிடையே உறைந்து கிடந்த அச்சத்தை அகற்றுவதற்கு வீராவேசப் பாடல்களை இயற்றினார். பாரதியாரின் கவிதை தனிச்சிறப்புடையது. நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சியின் விடிவெள்ளி பாரதி. அவர்தம் படைப்புகளில் தமிழ் புத்துயிர் பெற்று உயிர்த்துடிப்புடன் ஆனந்தக் கூத்தாடுகிறது. உண்மைக் கவிஞன் உள்ளத்தில் புலியின் குரலும் சிம்ம கர்ஜனையும் தாய்மொழியாகவே வந்து விளையாடும்



© 2021, IRJTSR 

என ஆங்கிலக் கவிஞன் ஜான் கீட்ஸ் குறிப்பிடுவது சாலப்பொருந்தும். மகாகவி மகத்தான ஒரு சமூக சிந்தனையாளர், சமூக விஞ்ஞானி. நம்மையெல்லாம் இணைக்கின்ற ஒரு மாபெரும் சக்தி. ஒவ்வொரு மனிதனும் தான் வாழ்ந்த காலத்தின் உருவாக்கம். அவனைப்பற்றியும் அவன் பங்களிப்பைப்பற்றியும் அறிந்து கொள்ள வேண்டுமெனில் அவன் காலச் சூழ்நிலைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**அன்னியர் ஆட்சியும் அன்றைய சமுதாயமும்**

ஆங்கிலேயரின் ஆட்சி, இந்திய சமுதாயம் மற்றும் கலாச்சாரத்திற்கு பெரும் சவாலை ஏற்படுத்தியது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மூன்று காரணிகள் இந்தியாவை பாதித்தன. அவை: அ.தடையில்லா வாணிபம், ஆ. ஜெரோம் பென்தாமின் பயன்பாட்டு கோட்பாடு, இ.கிறித்துவ மதப் பிரச்சாரம். பிரான்சில் பிரெஞ்சு புரட்சி வெடித்த காலத்தில், இங்கிலாந்தில் தொழிற்புரட்சி தோன்றியது. புதுப்புது கண்டுபிடிப்புகள் உற்பத்தி முறையில் புரட்சிகரமான மாறுதல்களை அறிமுகப்படுத்தின. முதலாளித்துவ கோட்பாடும், வங்கிகளின் தோற்றமும் கடல் கடந்த வாணிபத்தை பெருக்கின.நாட்டின் செல்வ வளம் உயர்வதற்கு முதலாளிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் ஆங்கில அரசு முழு சுதந்திரம். வழங்க வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. இவ்வாறு பத்தொன்பதாம் நூற்றாண்டில் தடையில்லா வர்த்தகமுறை (*Laissez Faire*) உருவாயிற்று. தடையில்லா வாணிப காலம் இந்தியாவின் பொருளாதார நலன்களை பெருமளவிற்கு பாதித்தது. ஆங்கில அரசு லங்காசையர் வியாபாரிகளுக்கு மிகுந்த லாபம் கிடைக்கும் வகையில் பருத்தி மீதான இறக்குமதி வரிகளை தங்கள் நலனுக்கு ஏற்றவகையில் மாற்றியமைத்தது. பற்பல வரிகளை விதித்துடன், உப்பு, அபினி போன்ற பொருட்களின் ஏகபோக உரிமையையும் பெற்றது. அன்றைய சென்னை ராஜதானியில் 1876-77 ஆண்டு தாது வருடப் பஞ்சத்தில் சுமார் ஐம்பது லட்சம் பேர் மடிந்தனர். இங்கிலாந்து நாட்டு முதலாளிகள் அபரித லாபத்திற்காக ரயில்வே போன்ற பொதுப்பணிகளில் பெருமளவில் முதலீடு செய்தனர். வேளாண்மையில், உணவுப் பயிர்களுக்கு மாற்றாக பணப்பயிர் சாகுபடிக்கு ஆங்கிலேய அரசு முன்னுரிமை அளித்தது. பஞ்சம், வறுமைக்கு அஞ்சி தென்னாப்பிரிக்கா, மொரிசியஸ், பிஜித் தீவு, பர்மா, இலங்கை போன்ற காலனிகளுக்கு மக்கள் கூட்டங் கூட்டமாகக் குடிபெயர்ந்தனர். அந்நாடுகளில் அவர்கள் பட்ட துன்பங்களுக்கு எல்லை இல்லை.

ஜெரோம் பென்தாம், புதிய, பலம் வாய்ந்த சிந்தனை இயக்கத்தின் தலைவர். குடியேற்ற நாடுகள் பயனற்றவை என்றும் மேலும் அவற்றை பாதுகாப்பதும் பராமரிப்பதும் மிகுந்த பொருட்செலவு நிறைந்தவை என்றும் வாதிட்டார். இங்கிலாந்தில் 'ஏகாதிபத்திய எதிர்ப்பலை' எழுந்தது. மேலும், பென்தாமின் காலம், மக்களின் "இயற்கை உரிமைகளில்" (Natural Rights) நம்பிக்கை கொண்டிருந்த காலம். இக்கோட்பாட்டையே பிரெஞ்சு தத்துவ ஞானி ஜீன் ஜேக்ஸ் ரூசோ மக்களிடையே பரப்பினார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சுதந்திர பிரகடனமும் இதனையே அடித்தளமாகக் கொண்டது. பென்தாமின் பயன்பாட்டுக் கோட்பாடு, பகுத்தறிவு மற்றும் அறிவியல் மேன்மையை ஏற்றுக்கொண்டது. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'கிறித்தவ வேதோபதேசம்' 'கிறிஸ்துவ வணக்கம்' போன்ற நூல்கள் அச்சிடப்பட்டன. 1813 ஆம் ஆண்டு சாசனச்சட்டம், கிறித்துவ மதப் பிரச்சாரத்திற்கு பல சலுகைகளை அளித்தது. அலெக்சாண்டர் டப்பின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்ட கல்கத்தா பிரிவினர், கிறித்துவ மத மாற்றம் மேனாட்டு கருத்துகளை ஏற்றுக்கொண்டதன் பின் தொடர்ச்சியாகக் கருதினர். பேப்டிஸ்ட் வில்லியம் கேரி, செராம்பூரிவிருந்து அலை அலையாக கிறித்துவ துண்டுப் பிரசுரங்களை பல்வேறு இந்திய மொழிகளில் வெளியிட்டார். இவ்வாறு 1813ல் சிறு துளியாக தொடங்கிய கிறித்துவ மதப்பிரச்சாரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் பெரும் வெள்ளமாக பெருக்கெடுத்தது. ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனி மதபோதகர்களை ஆதரித்தது, மதம் மாறியவர்களுக்கு பாதுகாப்பு அளித்தது.[2] கிறித்துவ கல்விச்சாலைகளும் மருத்துவமனைகளும், மற்ற அறப்பணிகளும் நாடெங்கிலும் பரவலான கிறித்துவ மத மாற்றத்திற்கு பெரிதும் துணைபுரிந்தன. இச்சூழலில்தான் இந்துமதம் சீரமைக்கப்படவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. சமய, சமுதாய

சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. V.S. வரதராஜ அய்யங்கார், நம் பெண்களையும், ஆடவர்களையும் கிறித்துவ பள்ளிகளுக்கு செல்லாமல் தடுக்க வேண்டினார். மேலும் அவர்களை இந்து பாடசாலைகளில் படிக்க வைத்து இந்து மதக் கொள்கைகளையும் அவற்றின் உண்மையையும், தொன்மையையும் மற்றும் இந்திய மொழிகளின் சிறப்பையும் உணர்த்த வேண்டுமென **ஆனந்த போதினி**யில் எழுதினார்[3]

ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வி, மேனாட்டு கல்வி முறையை ஒட்டி இருந்தது. மேனாட்டார் அவர்கள் மொழியை செல்வனே கற்று, பின்னர் கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழிகளை கற்கின்றனர். ஆனால் நம் நாட்டில் மட்டும் தான் தலைகீழ் பாடமாக இருக்கிறது. 'மாதா வயிறெரிய மகேஸ்வர பூஜை' என்பதற்கிணங்க தன் தாய்மொழியைச் செவ்வனே கற்காமல் புறக்கணித்துவிட்டு ஆங்கிலமொழியை மட்டும் கற்பது நியாயமா?

**முப்பெரும் இயக்கங்கள்**

ஆங்கிலேயர் ஆட்சியில் மேனாட்டு கருத்துகள் இந்தியாவில் நுழைந்தன. ஆங்கிலக் கல்வியின் தொடக்கம், செய்தித்தாட்களின் வளர்ச்சி, கிறித்தவ மதப்பிரச்சாரம், இந்திய மொழிகளின் புதிய மலர்ச்சி, பிராந்திய மற்றும் தேசிய அமைப்புகளின் தோற்றம் போன்றவை மக்களிடையே சிந்தனை விதைகளைத் தூவின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் முப்பெரும் இயக்கங்கள் இந்தியாவில் தோன்றின. அவை: அ. இராஜாராம் மோகன்ராய்[4] தொடங்கிய பிரம்ம சமாஜம், ஆ. பங்கிம் சந்திர சட்டர்ஜி[5] தொடங்கிய இலக்கிய புரட்சி மற்றும் இ. இந்திய தேசிய காங்கிரசின் எழுச்சி.[6]

**பிரம்மசமாஜ கருத்துகளும் பாரதியும்**

சுப்பிரமணிய பாரதியின் கருத்துகள் ஆழமாக பிரம்ம சமாஜ கோட்பாடுகளை பிரதிபலிக்கின்றன. இராஜாராம் மோகன்ராய், ஒருகடவுட் கொள்கையை கொண்டவர், உருவ வழிபாட்டை கடுமையாக சாடினார். கிறித்துவ மத போதகர்களின் கடுமையான தாக்குதல்களிலிருந்து இந்துமதத்தையும் அதன் தத்துவத்தையும் பாதுகாத்தார். சாதிப் பிளவு, பலதார மணம், சிசுக்கொலை, உடன்கட்டையேறும் வழக்கம் போன்றவற்றை எதிர்த்தார். பெற்றோரின் சொத்தில் பெண்களுக்கு பங்கு கொடுக்க வேண்டுமென வேண்டினார். கண்மூடிப் பழக்க வழக்கங்களையும் சமுதாய முன்னேற்றத்திற்கு எதிரான சமயச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கண்டித்தார். தனிமனித உரிமைகளுக்கும் பகுத்தறிவுக்கும் முன்னுரிமை அளித்தார். தேவேந்திரநாத் தாகூர், "தத்துவ போதினி" சபையை நிறுவி, மோகன்ராய் கருத்துகளை பரப்பி, பிரம்ம சமாஜத்திற்கு புத்துயிர் அளித்தார். அந்தணர்கள் அணியும் பூணூலை, சாதிப்பாகுபாட்டின் அடையாளம் என்பதால் துறந்தார். பாரதியார் 1906, ஆகஸ்ட்டில் தன் பத்திரிக்கை ஒன்றில் 'ராஜாராம் மோஹனராயர்' என்ற தலைப்பில் கட்டுரை வரைந்தார். அதில் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும் ராஜாராம் மோகன்ராயின் சிலையை நிறுவியிருக்க வேண்டும் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இந்தியா முழுமையும் பிரம்ம சமாஜக் கிளைகள் தொடங்கப்பட்டன. தமிழகத்தில் பிரம்ம சமாஜ சிந்தனைகளைப் பரப்பியவர் கடலூர் ஸ்ரீதரலு நாயுடு. தேவேந்திரநாத் தாகூரின் **பிரம்ம தர்மா** என்ற நூலையும் கேசவ சந்திர சென்னின் **தெய்வ வழிபாட்டில் மாதிரி வடிவம்** என்ற நூலையும் தமிழில் மொழி பெயர்த்தார். இயேசு சபையாரின் கிறித்துவ மதப்பிரச்சார எதிர்ப்பை முறியடிக்க **விவேக விளக்கம், தத்துவ போதினி, நீலலோச்சனி, சித்தானந்த தீபிகை** பத்திரிக்கைகளையும் ஸ்ரீதரலு நாயுடு நடத்தினார். அவருடைய சீடர், துரைசாமி அய்யங்கார்தான் சென்னை புரசைவாக்கத்தில் பூணூலைத் துறந்த முதல் தமிழ் பிராமணர். எஸ்.பி.நரசிம்மலு நாயுடு சேலம் மற்றும் கோயம்புத்தூரில் பிரம்ம சமாஜ கிளைகளை நிறுவி, **சேலம் பேட்ரியாட், கோயம்புத்தூர் கிரசென்ட்** என்னும் இருமொழி இதழ்களை வெளியிட்டார். பிரம்ம சமாஜத் தலைவர், சிவநாத் சாஸ்திரி, தனது வாழ்க்கை வரலாற்றில் கோயம்புத்தூர் பிரம்ம சமாஜத்தை குறிப்பிடுகிறார். 1897ஆம் ஆண்டில்

சென்னையில் குடியேறிய ஆந்திர சீர்திருத்த செம்மல், வீரசேலிங்கம் பந்துலு, தென்னிந்திய பிரம்ம சமாஜத்தின் தலைவரானார்.[7] பாரதியார் தனது **சந்திரிகையின் கதை**யில் பந்துலுவை குறிப்பிட்டுள்ளார். பிரம்ம சமாஜத்தைப் பற்றி தனது கட்டுரைகளில் கூறியதோடு **சந்திரிகையின் கதை, ஆறில் ஒரு பங்கு** என்ற இரு கதைகளிலும் குறிப்பிடுவது பாரதியாரின் எண்ணங்களில் பிரம்ம சமாஜத்தின் தாக்கத்தை வெளிப்படுத்துகிறது.

**பாரதியும் நிவேதிதா தேவி அம்மையாரும்**

1897ஆம்ஆண்டில் பாரதியாரின் திருமணம் நடந்தது பின்னர், தன் தாய்மாமாவுடன் வாரணாசி சென்றார். அங்கே இரு திருப்புமுனைகள் ஏற்பட்டன: ஒன்று, ஆங்கிலக் கவிதையில் உண்டான பேரவா; மற்றொன்று, அன்றைய சமுதாயத்தில் அவர் கண்ட பெண்களின் நிலை. காசியில் பல மொழிகளை கற்கும் வாய்ப்பு கிடைத்தது. சமஸ்கிருதம் அவரது விருப்பத் தேர்வு. மேலும் இந்தி, தெலுங்கு, பிரெஞ்சு, ஆங்கிலம் போன்ற மொழிகளையும் கற்றார். சீக்கிய நண்பர் ஒருவரின் வழக்கத்தால் தலைப் பாகை அணியத் தொடங்கினார். 1898 முதல் 1901 ஆம் ஆண்டு வரை காசியில் வாழ்ந்து பின் எட்டையபுரம் திரும்பினார். சென்னையில் பத்திரிக்கை பணியும் தேசிய தீவிரவாத அரசியல் ஈடுபாடும் சமூக சீர்திருத்த தாகத்தையும் வேகத்தையும் வலுப்பெற செய்தன.

1905 ஆம் ஆண்டு காங்கிரஸ் மகாநாட்டில் பிரதிநிதியாக பாரதி கலந்து கொண்டார். 1906 ஆம் ஆண்டில் கல்கத்தா காங்கிரஸ் மாநாட்டிலும் பங்கேற்றார். நிவேதிதா தேவி அம்மையாரை (மார்கரெட் நோபிள்) சந்தித்து தனது ஆத்ம குருவாக ஏற்றுக்கொண்டார். பாரத தேசத்தை, அடிமைச் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அல்லலுறும் அன்னையின் உருவமாக மனதில் பதியம்படி பாரதியிடம் நிவேதிதா தேவி உபதேசித்தார்.[8] அயர்லாந்தைச் சேர்ந்த மார்கரட், விவேகானந்தரின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டு, 1898 ஆம் ஆண்டு மார்ச் 25ம் நாள் ***இராமகிருஷ்ணர் இயக்கத்தில்*** சேர்ந்தார். இந்தியாவில் பெண் கல்வி வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றினார். மேலும் இந்திய விடுதலை இயக்கத் தலைவர்களான அரவிந்தர், பூபேந்திரநாத் தத்தா, பரீந்திர குமார் கோஷ் போன்றோருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். தனது மனதில் கவிந்திருந்த மையிருளை பளிச்சென்று போக்கியதைத்தான் “அடியேன் நெஞ்சில் இருளுக்கு ஞாயிறாய்” நிவேதிதா விளங்கினார் என பாரதி கூறுகிறார். மேலும், “ஸ்வதேச பக்தி உபதேசம் புரிந்தருளிய குரு”[9] என்றும் அழைத்தார். சுப்பிரமணிய பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்ரமணிய சிவா மூவருமே சுவாமி விவேகானந்தரின் ஆன்மிக – தேசிய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர்கள்.

**சுதேசி இயக்க எழுச்சி**

சுப்பிரமணிய பாரதி வாழ்ந்த காலமும் இந்திய தேச விடுதலையின் எழுச்சிக் காலமும் ஏறக்குறைய ஒரே காலத்தவை. 1904 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் பாரதியார் **சுதேசிமித்திரன்** நாளிதழின் துணையாசிரியரானார். 1905ஆம் ஆண்டு, அக்டோபர் 16 ஆம் நாள், வங்காளம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டது. அந்த நாள் தேசிய துக்க தினமாக கடைப்பிடிக்கப்பட்டது. ‘வந்தே மாதரம்’, வங்க மக்களின் தேசிய கீதமாயிற்று. வங்காளத்தை தொடர்ந்து பம்பாய், சென்னை ராஜதானிகளிலும் சுதேசி, சுயராஜ்ஜிய இயக்கங்கள் வேகமாக பரவின. அஜித்சிங், கிருஷ்ணகுமார் மித்ரா, அஸ்வினி குமார் தத்தா, லாலா லஜபதிராய், பாலகங்காதர திலகர், வ.உ.சிதம்பரம் பிள்ளை போன்ற தலைவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.[10] மகாகவி, 1905 ஆம் ஆண்டில் தன் அரசியல் குருநாதர், பாலகங்காதர திலகரை புனேயில் சந்தித்தார். அதன் பின்னர் ஜி.சுப்ரமணிய ஐயரின் மிதவாதக் கொள்கையிலிருந்து மாறுபட்டு, *இந்தியா* தமிழ் வாரப் பத்திரிக்கையைத் தொடங்கி, அதன் ஆசிரியரானார். சிறு சிறு பதங்களுடன் கூடிய ஒரு நவீன கம்பீர நடையை *இந்தியா* பத்திரிகையில் புகுத்தினார். ஆங்கில அரசின் அடக்குமுறைகளையும் விஞ்சி *இந்தியா* நெருப்பு மழை

பொழிந்தது. 1907 ஆம் ஆண்டு சூரத் காங்கிரஸ் பிளவிற்குப் பின் திலகரின் தலைமையை பாரதி ஏற்றார். 1907-08 ஆம் ஆண்டுகளில், திலகரின் சொற்பொழிவுகளை தனது பத்திரிக்கையில் வெளியிட்டர்.

**ஆதி பராசக்தி ஆராதனை**

நம் பாரத தேசத்தில் மட்டும்தான் பெண் தெய்வ வழிபாடு மிகுதியாக உள்ளது. உலகை உருவாக்கிக் காத்தருளும் பரம்பொருளை பெண்மையின் வடிவமாக வழிபட்டனர். அப்பரம்பொருளை ஆதி பராசக்தியாக ஆராதனை செய்தனர். பரமாத்மா வேறாகவும் பராசக்தி வேறாகவும் எண்ணுவது ஏற்புடையதல்ல. சக்தியை தெய்வமாக வழிபடும் சாக்தா மதத்தினர், பிரம்மத்தை ‘லோக மாதாவாகப்’ போற்றினர். இராமகிருஷ்ண பரமகம்சர் அன்னையை, “என் தாய் காளி” என அழைப்பார். மராட்டிய மாமன்னன் வீரசிவாஜிக்கு பவானியே தெய்வம். பாரதி, “ஓம் காளி! வலிய சாமுண்டீ!” என்று வழிபடுகிறார். அன்னை பராசக்திக்கு ‘பீடாபஹாரி’ என்ற பெயரும் உண்டு. ‘பக்தர்களின் பீடைகளைப் பறித்துக்கொண்டு நல்லன அருள்பவள்’ என்பது இதன் பொருள். ‘பீடாபஹாரி அம்மன்’ என்ற பெயரே மருவி ‘பிடாரி அம்மன்’ என்றானது. நவராத்திரியில் ஒன்பதிரவுகளும் பராசக்திக்கு பூஜை செய்கின்றனர். லட்சுமி -சரஸ்வதி – பார்வதியென மும்மூர்த்திகளாக எழுந்தருள்வது பராசக்தியே.[11]

**“எங்கெங்கு காணினும் சக்தியடா!”**

நமது வழிபாட்டிற்குரிய இறை வடிவங்கள் அனைத்திலும் மிகப் பழமையானது சக்தி வழிபாடு. சைவம், வைணவம் இரண்டிலும் அன்னை வழிபாடு இன்றியமையாதது. மகாகவி, சிறுவயதில் தான் இழந்த தாய் லட்சுமியை, தன் வாழ்நாள் முழுவதும் தேடித்தேடிப் பல வடிவங்களில் காண்கிறான். அவருடைய பாடல்களிலும், கதைகளிலும், கனவுகள் அடிக்கடி வருகின்றன. அவருடைய கதை ‘ஞானரத’த்தில் பர்வத குமாரி வழிகாட்டியாக வருகிறார். பாரதி படைப்புகளில் பெண் இனத்தோற்றமே அடி நாதமாக விளங்குகிறது. பெருங்கவியின் ஜீவசக்தியே இந்தப் பெண் தோற்றப் பிரம்மம்தான். மகாகவியின் மனநிலைக்கேற்ப இத்தோற்றம் தெய்வ சக்தியாக, காதலி கண்ணம்மாகவா, பாரத மாதாவாக வெவ்வேறு வடிவம் கொள்கிறது.[12] ஜெர்மானிய சமூகவியலாளர், மேக்ஸ் வெபர் சுட்டிக் காட்டுவதைப் போன்று புதுமைப் பெண்ணை லட்சிய படிம ஆக்கமாக புரட்சிக்கவி உருவாக்குகிறான். பாரதி கண்ட புதுமைப் பெண்ணின்-புரட்சி பெண்ணின்-இலக்கணங்களையெல்லாம் கொண்டவள் பாஞ்சாலி. பெண்ணின் ஆற்றலை செப்புவதற்கான அடையாளம் பாஞ்சாலி. பாஞ்சாலியை ஒரு புதுமைப் பெண்ணாகவும், உயர்ந்த தெய்வப் பெண்ணாகவும் கண்டு களிக்கிறார். தேசபக்தியை தெய்வ பக்தியுடன் இணைத்துப் பாடியவர் மந்திரக் கவி. “தெய்வம் என்பது யாது? தெய்வமென்பது ஆதர்சம், தெய்வமென்பது சித்த லட்சியம், தெய்வமென்பது உண்மை, தெய்வமென்பது வனப்பு.”[13.]

இந்தியா விடுதலைபெற பாரதி, தணியாத தாகம் கொண்டான், அடிமைத்தனத்தில் முடங்கிக் கிடந்த மக்களை தட்டியெழுப்பினான். எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் அடிப்படை ஆற்றல், அதாவது சக்தி. எனவே ஆற்றலை அளிக்கும் சக்தி வழிபாட்டை நாடினான், சக்தியை பெற்றான். நம் நாடும் பாரதி மூலம் சக்தியைப் பெற்றது. இன்றைய அறிவியல் உலகில், பொருளையும் (Matter) பொருளின் ஆற்றலையும் (Energy) தனித்தனியே பகுத்துக் காணும் மரபு வளர்ந்திருக்கிறது. இம்முறையில்தான் பண்டைத்தமிழர்கள் சிவத்தைப் பொருளாகவும், அம்மையைப் பொருளின் ஆற்றலாகவும் இணைத்து **அம்மையப்ப**னாக வழிபட்டனர்.[14] அறிவியல், சக்தியை இரு பிரிவுகளாக பகுக்கிறது. ஒன்று, உள்நிலை சக்தி (potential energy), மற்றொன்று, இயங்கும் சக்தி (kinetic energy). ஆதி சக்தியின் இயக்கும் தன்மை, இயங்கும் சக்தி போன்றது. பூமியை, பூமாதேவி என்பதும், நதிகளை- கங்கை, காவிரி, யமுனா, கோதாவரி என்றழைப்பதும், மொழியை, தாய்மொழி என்பதும்,

கல்வியை, கலைமகள் எனப் போற்றுவதும், செல்வத்தை, திருமகள் என உயர்த்துவதும் போற்றுதலுக்குரியன. தாய் மொழியில் தொடங்கி எல்லாவற்றையும் பெண்ணாகவே சமூகம் காண்பதற்கு அறிவு பூர்வமான காரணங்கள் உள்ளன. பெண்கள் இல்லாத உலகை எவராலும் கனவிலும் காண இயலுமா?

**விதவை மறுமணம்**

மனித சமுதாயத்தில் இன்றுவரை ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற, விகாரங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டு சிறுகதை. எந்த ஒரு கதைக்கும் மனித வாழ்வுதான் அடிப்படை. அனுதினங்களின் எதார்த்தங்களில் இருந்து கதையைப் பிரிக்கவே முடியாது. பாரதியாரின் **சந்திரிகையின்** கதையில், மகாலிங்கையரின் தங்கை, விசாலாட்சி, கணவனை இழந்தவள். மகாலிங்கையரின் மனைவி, கோமதி தன் மரண வாக்குமூலத்தை பின்வருமாறு உருக்கமாக பதிவு செய்கிறாள்:

> ‘‘விசாலாட்சி! விசாலாட்சி! நான் இரண்டு நிமிசங்களுக்கு மேல்
> உயிருடனிருக்கமாட்டேன். என் பிராணன் போகு முன்னர் உன்னிடம் சில
> வார்த்தைகள் சொல்லிவிட்டுப் போகிறேன். அதை உன் பிராணன்
> உள்ளவரை மறந்து போகாதே! முதலாவது, நீ விவாகம் செய்து கொள்.
> விதவா விவாகம் செய்யத்தக்கது… ஆண்களுக்குப் பெண்கள்
> அடிமைகளாய், ஆண்களுக்குப் பெண்கள் அஞ்சி ஜீவனுள்ளவரை
> வருந்தி மடிய வேண்டிய அவசியமில்லை. ஆதலால், நீ ஆண்மக்கள்
> எழுதி வைத்திருக்கும் நீசத்தனமான சுயநல சாஸ்திரத்தை கரியடுப்பிலே
> போடு.’’[15]

பாரதியின் கதாபாத்திரங்கள், அன்றைய சமுதாய கொடுமைகளை அச்சமின்றி, உறுதியுடன் எதிர்ப்பவர்களாக சித்தரிக்கப்படுகின்றன.

**அச்சமில்லை! அச்சமில்லை!**

உரிமையுணர்வில்லாத இனத்திலே அடிமை மனப்பான்மையும் நீசத்தன்மையுமே ஓங்கி நிற்கும்; உண்மையான, உயர்வான கலை மிளிராது; கோழைத்தனமே பளிச்சிடும். அச்சத்தாலும் அடிமைச் சிறுமதியாலும் அமிழ்ந்து கிடந்த மக்களை தட்டியெழுப்பியவர் பாரதி.

> ‘‘எல்லாத் துயரங்களும், அச்சங்களும், கவலைகளும் நீங்கி நிற்கும்
> நிலையே முக்தி. அதனை அடைய வேண்டுமென்ற விருப்பம்
> ஏற்பட்டால் நீ அதற்குரிய முயற்சி செய். இல்லையெனில்,
> துன்பங்களிலிருந்து ஓயாமல் உழன்று கொண்டிரு. உன்னை யார்
> தடுக்கிறார்கள்?’’[16] என்று பகவத்கீதை விளக்கத்தில் கூறுவது
> குறிப்பிடத்தக்கது.

**பெண்ணின எழுச்சி முழக்கம்**

சமுதாயத்திலே வழக்கில் இருந்த, இருக்கின்ற, பின்வரும் சொலவடைகள் மற்றும் சொற்றொடர்கள் சமுதாய மதிப்பீட்டையும் பெண்களின் நிலையையும் அப்பட்டமாக சித்தரிக்கின்றன: *பெண்புத்தி பின்புத்தி, உண்டி சுருக்குதல் பெண்டிர்க்கு அழகு, பெண்ணுக்கு செவ்வாய் தோசம், மணப்பெண் கால் வைத்த நேரம் சரியில்லை, பொட்டைக் கழுதை, மொட்டைப் பாப்பாத்தி, சீக்குக் கோழி, பொம்பளை சிரிச்சாப் போச்சு, ஐந்தாறு பெண் பிள்ளைகள் பெற்றால் அரசனும் ஆண்டி, சாண் பிள்ளையென்றாலும் ஆண் பிள்ளை, பிசாசு, சனியன், மூதேவி, முதிர் கன்னி, வாழாவெட்டி, மலடி.*



© 2021, IRJTSR 

பெண்களுக்கு எதிரான அநீதிகளையும், பிராமணீய-புரோகித மேலாதிக்கத்தையும், ஆணாதிக்க மனோபாவத்தையும் வெட்டிச் சாய்ப்பதற்கு தன்னுடைய படைப்புகளால் வீர முரசு கொட்டியவர் நமது முண்டாசுக் கவி. மகாகவி தன்னுடைய ''புதிய ஆத்திசூடியில்,''**அச்சந் தவிர், ஐம்பொறி ஆட்சிகொள், உடலினை உறுதி செய், ஊண்மிக விரும்பு, கொடுமையை எதிர்த்து நில், செய்வது துணிந்து செய், தொன்மைக் கஞ்சேல், நேர்படப்பேசு, தையலை உயர்வு செய், புதியன விரும்பு, வையத் தலைமைகொள், வேதம் புதுமை செய், சிதையா நெஞ்சுகொள், தீயோர்க் கஞ்சேல், சாவதற் கஞ்சேல்,''**[17] என சம்மட்டி கொண்டடித்து மக்களின் மடை மாற்றத்திற்கு வழி வகுத்தார். பெண்கள் விடுதலையின் இன்றியமையாத ஆரம்பப் படிகளாக, பத்து சிறந்த அம்சங்களை பாரதியார் சுட்டிக்காட்டுகிறார்.[18]

மக்கள் சமுதாயத்தின் ஒரு பாதியாகத் திகழும் பெண்களின் உயர்வு அச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பெண்களை அடிமைகளாக எண்ணிய சமுதாயத்திற்கு வாழ்வுமில்லை, வளர்ச்சியுமில்லை. சமுதாயத்தின் ஒருபாதி மற்றொரு பாதியை அடிமைபடுத்தியிருக்கும் போது எவ்வாறு அது விடுதலை பெறமுடியும்? என்று நிவேதிதா தேவி அம்மையார் கேள்வி எழுப்பினார். பெண்ணினால் ஆண்மைக்கு வீரமும், வலிமையும், வெற்றியும், இன்பமும் உண்டாகும், பெண்களின் அறிவை வளர்த்தால் ஆக்கம் பெருகும், வையகத்தின் பேதைமை அகன்றுவிடும். ஒரு பறவை பறப்பதற்கு இரண்டு சிறகுகள் தேவைப்படுவதுபோல் இந்தியாவிற்கு கல்வி கற்ற ஆண்கள், பெண்கள் இரு பிரிவினரும் கட்டாயம் தேவை என்பதை சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தி கூறுகிறார்.[19] பாரதி, சோவியதது நாட்டுப் புரட்சிப் பெண்ணைக் கண்டான். ''நங்கை கூறும் நவீனங்களையும்'', ''உதய கன்னியின் உரையாடல்களையும்'' கேட்டான். புதுமைப் பெண்ணை அழைத்து வந்து ''துன்பம் நீக்கும் சுதந்திரப் பேரிகை'', முழங்கச் செய்தான்.[20] ஆண்களுக்கான சுதந்திரம் எல்லையற்றதாகவும், பெண்களுக்கான சுதந்திரம் அடக்கப்பட்டதாகவும் இருந்த சமுதாயத்தில் பெண்ணுரிமைக்காக ஓங்கி குரலெழுப்பியவர் பாரதி. அவரைத் தொடர்ந்தே பாரதிதாசன் உள்ளிட்ட பலரும் பெண்ணுரிமைக்கு வலு சேர்த்தனர்.

**வாழ்க்கைத் துணை**

அறம், ஒழுக்கம், இரக்கம், பணிவு, விருந்தோம்பல், மனித நேயம், தொண்டு, மனோபாவங்கள், தொன்று தொட்டு தொடரும் பழக்க வழக்கங்கள், செய்து வந்த செயல்கள், இவற்றில் திரண்ட உருவந்தான் நாம். இந்து மதத்தின் அச்சாணியாக திருமணம் திகழ்கிறது. ஆணும் பெண்ணும் இல்லறத்தில் இணைவது ஒரு புனித சடங்காகும். ஏனைய மதங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஒரு பெண் தன் தாய், தந்தை, உடன் பிறப்புகளை விட்டு விட்டு, புகுந்த வீட்டிற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக, தைரியமாக, நம்பிக்கையுடன் வருகிறாள்! மணமகள் எதை நம்பி, யாரை நம்பி, இவ்வளவு முகமலர்ச்சியும் மன உறுதியும் கொண்டிருக்கிறாள்? மணமகன் இதனை நன்கு சிந்திக்க வேண்டும். வாழ்க்கைத் துணையின் ஆத்ம சக்தியையும் தைரியத்தையும் அறிந்து கொண்டால் அவள்பால் தான் செய்ய வேண்டிய கடமையை ஒவ்வொரு இளைஞனும் தெரிந்து கொள்வான். தான் இட்டது சட்டம் என்று எண்ணமாட்டான், தான் எஜமானன், மனைவி ஊழியம் செய்பவள் என இழிவாக நினைக்கமாட்டான்.[21] இப்பூவுலகில் உயிரினம் இரட்டைத்தன்மை கொண்டுள்ளது; இரண்டுமே சமபாதி, **அர்த்த நாரீஸ்வரர்** சிற்பத்தைப் போல. ஆணும் பெண்ணும் சேர்ந்ததே மானிடம்.

**திறனாய்வு**

மகாகவி காலத்தை வென்ற அமரகவி. அடிமைத் தளையிலிருந்து அரசியல் விடுதலையும், சாதிக் கொடுமையிலிருந்து சமுதாய விடுதலையும், சமயக் கொடுமையிலிருந்து ஆன்மீக விடுதலையும் பெறுவதற்காக இந்திய மக்களின் ஒற்றுமையை வலியுறுத்தினார். பாரத நாடு பழம் பெரும்நாடு, உன்னத ஆன்மீக



© 2021, IRJTSR 

சிந்தனைகளின் உறைவிடம். நமது பண்பாடும் நாகரீகமும் தொன்மை மிக்கவை. ஆனால், அவையெல்லாம் ஒளியிழந்து, பொலிவிழந்து, வடுக்களும், சுருக்கங்களும் மிகுந்து, நைந்து, நொய்ந்து போய்விட்டன. அவற்றை மீண்டும் தழைக்கச் செய்திட புத்துணர்ச்சியும் புதுப்பொலிவும் பாய்ச்சிய பாவலன் பாரதி. விடுதலை வானில் எழு ஞாயிறு எழும் முன்பே முழைத்த விடிவெள்ளி.பாரதியின் படைப்புகள் எளிமையானவை, இனிமையானவை, ஆழமானவை, வலிமையானவை, நுட்பமானவை, செறிவு நிரம்பியவை.

தமது பாட்டுத் திறத்தாலே நாடு, வீடு, ஆண், பெண், குழந்தை, கல்வி, அறிவு, தொழில், ஒற்றுமை, விடுதலை, அன்பு, சக்தி, தெய்வ சக்தி, பிரம்ம ஞானம் போன்ற அனைத்திற்கும் தெளிவான வழிகாட்டிய வரகவி, பாரதி. வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை உணர்ச்சி, சுதந்திரம் போன்றவை மகாகவி பாராட்டிப் பாடிய பல குணங்கள். பெண் விடுதலையின் சாரதி, பாரதி. கண்ணைக் காக்கும் இமையிரண்டென்னவே, ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமாக வாழ்வாங்கு வாழ பெண்மையை முன்னிலைப்படுத்திய முதல் கவி. பெண்ணினம் உயர்வதற்கு அடித்தளம் அமைத்தவர் மகாகவி. புரட்சி கவிஞனின் வாழ்வு ஒரு சங்கமம். நாடு என்பது. வெறுமனே பூகோளப் படமல்ல, மாறாக அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பு. பிரம்ம சமாஜ கோட்பாடுகள், நிவேதிதா தேவி அம்மையாரின் ஆளுமை, பால கங்காதர திலகரின் தலைமை, பத்திரிக்கை பணிகளில் ஈடுபாடு, பிரெஞ்சு, ரஷ்ய புரட்சிகளின் தாக்கம் போன்றவற்றால் பெண்ணுரிமை சிந்தனைகளை அழுத்தமாக பதிவு செய்தார். பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்கிறார். மகாகவி மறைந்து ஏறக்குறைய நூறாண்டுகளாயினும், அப்பெருங்கவியின் அரும்பெரும் சிந்தனைகள் சாகாவரம் பெற்றவை.

**முடிவுரை**

புரட்சிக்கவியின் சொல், செயல், சிந்தனை அனைத்திலும் பாரத தேசத்தின் மேன்மையே நிறைந்திருக்கிறது. அவலமிக்க அடிமை நிலையைச் சபித்து சாடும் உணர்ச்சி வேகத்தினைக் கவிதை ஓட்டம் காட்டுகின்றது. மொழிப்பற்று, தேசப்பற்று, ஆனந்த சுதந்திரம், பகுத்தறிவு, பல்சமய இணக்கம், சமுதாய மாற்றம், பெண்ணின ஏற்றம், ஆன்மீக நாட்டம், தொழில் முன்னேற்றம், கலியுகத்தின் ஓட்டம் ஆகியவற்றின் இணைந்த தன்மையை படம் பிடித்துக் காட்டும் அற்புதக் காலக் கண்ணாடி மகாகவி. பாரதி கடந்த காலம் மாத்திரமல்ல, நிகழ் காலமாகவும் உள்ளார், தமிழின் எதிர் கால உருவாக்கத்திலும், உருவாக்கப்படும் எதிர் காலத்திலும் அவர் இருப்பார் என்று பேரறிஞர். கார்த்திகேசு சிவத் தம்பி புகழ் மாலை சூட்டுகிறார். ஆம் காலத்தை வென்ற தீட்சணியமான எண்ணத் துணிபுடன் விளங்கியவர் பாரதி. "கால்களைத் தரையில் உறுதியாக ஊன்றியவாறே வானில் உயரப் பறக்கும் விந்தைப் பறவை' என்று புரட்சிக் கவிஞரை, தண்டமிழாசான், ஔவை. நடராஜன் வியந்து போற்றுகிறார். **அன்பின் வழியது உயிர்நிலை, என் கடன் பணி செய்து கிடப்பதே, வாழ்க்கை வாழ்வதற்கே** என்று வாழ்வாங்கு வாழ்ந்து வான்புகழடைந்த பெண்மணிகள் --- ஆன் சுல்லிவன், மரியா மாண்டசோரி, சாவித்திரிபாய் பியூல், துர்காபாய் தேஸ்முக், பேகம் ஜாபர் அலி, ஆர்.லீலாவதி, அன்னிபெசன்ட் அம்மையார், சகோதரி. நிவேதிதா தேவி, சூசன் பிரௌனல் ஆன்டோனி, கவிக்குயில் சரோஜினி, அன்னை கஸ்தூரிபா, அன்னை தெரசா, நீதியியல் வல்லுநர், ரூத் பேடர் ஜின்ஸ்பெர்க் போன்றோர் இன்றைய இளம் தலைமுறையினருக்கு ஒளி வீசும் கலங்கரை விளக்கங்கள். பெண்ணினம் ஏற்றம் கண்டால், 'வானம் வசப்படும்', வையம் தழைக்கும், வாழ்வு செழிக்கும்.

**பின்குறிப்புகள்**

[1] **தாமரை**, "கே.சி.எஸ். சில நினைவுகள்", ஜீலை, 1999, சென்னை, ப.28,& 34.

[2] Sugata Bose and Ayesha Jalal, Modern South Asia, OUP, New Delhi, 1999, PP 76-81.

[3] **ஆனந்த போதினி,** மதராஸ், டிசம்பர், 1924, ப.229.

[4] **நவீன இந்தியாவின் விடிவெள்ளி,** பெண் உரிமைகளின் பாதுகாவலர். உடன் கட்டையேறும் வழக்கம் சட்டத்தின் மூலம் தடை செய்யப்படுவதற்கு அரும்பணியாற்றினார். அறநெறியிலும் அறிவுத் திறனிலும் பெண்கள் ஆண்களுக்கு தாழ்ந்தவர்கள் அல்லர் என்றுரைத்தார்.

[5] நவீன இந்திய மொழிகள் இயக்கத்தின் முன்னோடி, வங்காள மொழியில் உரை நடையை உருவாக்கினார். 'இளைய வங்காள' இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர். தேசிய உணர்வு பொங்கும் புதினம், **ஆனந்த மடத்**தை எழுதினார். 1882 ஆம் ஆண்டு 'வந்தே மாதரம்' பாடல் **ஆனந்த மடம்** நாவலுடன் இணைக்கப்பட்டது. இந்துஸ்தானத்தை வணங்குகிறேன், இந்து தர்மத்தைப் போற்றுகிறேன் என்பது இதன் பொருள். 'வந்தே மாதரம்' என்ற சக்தி மந்திரம் தமிழர் நெஞ்சத்தை அள்ளியது.

[6] பல வட்டார அமைப்புகளைத் தொடர்ந்து இந்தியா முழுமைக்கும் பொதுவான ஒரு அமைப்பாக 1885ல் **இந்திய தேசிய காங்கிரஸ்** தோன்றியது. இதனை ஏற்படுத்தியவர் ஆலன் ஆக்டேலியன் ஹியூம். W.C. பானர்ஜி தலைமையில் முதல் காங்கிரஸ் மகாநாடு பம்பாயில் நடைபெற்றது. இதில் 75 பிரதிநிதிகள் பங்கேற்றனர். இந்திய விடுதலை இயக்கத்தில் இதன் பணி அளப்பரியது.

[7] **டாக்டர் S.N. சோமயாஜீலு அவர்கள் 84 வது பிறந்த நாள் சிறப்பு விழாமலர்**, திருநெல்வேலி, 1985, ப. 43-45.

[8] மு.மு. இஸ்மாயில், **கவிச்சக்கரவர்த்தியும் கவியரசரும்,** சென்னை, 1993-ப.43-47.

[9] நிவேதிதா, (அர்ப்பணிக்கப்பட்டவர்) இந்தியா விடுதலை பெறுவதற்கு சாத்வீக மார்க்கங்களை நம்பியிருக்கவில்லை, ஆயுதம் தாங்கிய போராட்டத்தினாலும் புரட்சியினாலும்தான் விடுதலை பெற முடியும் என்று எண்ணினார்.

a. ரகுநாதன், **பாரதி: காலமும் கருத்தும்,** 1982, மதுரை, ப. 174.

[10] Bipan Chandra, **Modern India,** New Delhi, 1986,PP 241-44.

[11] மகாகவி சி. சுப்ரமணிய பாரதியார், **தத்துவம்,** மதுரை, 1964, ப. 45-59.

[12] "பாரதியின் அகமும் புறமும்", **கல்கி தீபாவளி மலர்**,சென்னை, 2017, ப. 89-90.

[13] **பாரதியார் கதைகள்**, "கந்தர்வலோகம்", சென்னை, 1977, ப. 28.

[14] குன்றக்குடி அடிகளார், "பாரதியின் சக்தி வழிபாடு", **மகாகவி பாரதியார் நூற்றாண்டு விழா மலர்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், **1982, ப. 205.**

[15] **பாரதியார் கதைகள், "**சந்திரிகையின் கதை", சென்னை, 1977, ப. 110-12.

[16] பாரதி, **பகவத்கீதை,** சென்னை, 1963, ப. 11-15.

[17] டி.வி.எஸ் மணி, சீனி.விசுவநாதன், **பாரதியார் கவிதைகள்**, 1981,சென்னை, ப. 258-60.

[18] பெண்கள் ருதுவாகும் முன்னர் விவாகம் கூடாது.

a. விருப்பம் இல்லாமல் விவாகம் செய்துவைக்கக்கூடாது.

b. திருமணத்திற்குப் பின் கணவனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும்.

c. அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக்கூடாது.

d. குடும்ப சொத்தில் பெண்களுக்கு சம பாகம் கொடுக்க வேண்டும்.

e. கணவன் இறந்த பின்னர் மறுமணம் புரிவதைத் தடுக்கக்கூடாது.

f. கணவனைத்தவிர மற்ற ஆண்களுடன் பெண்கள் பேசக்கூடாது என்பது ஒழிக்கப்படவேண்டும்.

g. திருமணம் இல்லாமல் தனியே கைத்தொழில், வியாபாரம் நடத்த வாய்ப்பு வழங்கப்படவேண்டும்.

h. ஆண்களைப் போன்றே பெண்களும் உயர்கல்வியின் எல்லா துறைகளிலும் பயிலவேண்டும்.

i. தகுதி வாய்ந்த பெண்கள் அரசாட்சியில் எவ்வித உத்தியோகம் பெற விரும்பினாலும், அதைச் சட்டம் தடுக்கக் கூடாது.

j. பெண்களுக்கு இராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும்.

k. சி.சுப்ரமணிய பாரதியார், **மகாகவி பாரதியார் கட்டுரைகள்,** மதுரை, 1964, ப.304-5.

[19] **Letters of Swami Vivekananda,** Advaita Ashram, Calcutta, 1964, PP. 239-40.

[20] ப. ஜீவானந்தம், **பாரதி வழி,** சென்னை, 1975, ப.34-36.

[21] ராஜாஜி,"காதலும் கலியாணமும்", **கல்கி தீபாவளி மலர்**, 1998, சென்னை, ப.151 - 55.

Address for correspondence,
K.Priyadarshini, 8Theni Main Road,
Nagamalai Pudukottai, Opp to S.V.N.College, Madurai-625019

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிர்காலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR 